Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.71/2018

**Depositions of PW- 12**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.தேவதாஸ் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | உத்திரப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24h day of December 2025.

24.12.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் காவல்கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.03.2017 ம் தேதி திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 12.15 மணியளவில் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலைப்பெற்று வாகன விபத்தில் காயமடைந்து அயன் நத்தம்பட்டியை சேர்ந்த முத்தையா மனைவி கூடம்மாள் என்பவரை விசாரிக்க சென்றபோது அவர் பேசமுடியாத நிலையிலிருந்ததால் மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துமவனைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கிடைத்த தகவலை பெற்று நிலையம் வந்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து மேல் அதிகாரிகளிடம் தகவல் சொன்னேன். கடந்த 29.03.2017 ம் தேதி 11.00 மணிக்கு நிலையத்திலிருந்தபோது திருவில்லிபுத்தூர் அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரியும் மூவரை வென்றான் ஊரைச் சேர்ந்த வேலுச்சாமி மகன் கொத்தாளமுத்து என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.232/2017 பிரிவுகள். 279, 337 இதச ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த விவரத்தை மேல்

அதிகாரிகளிடம் தெரிவித்தேன். பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.